www.freetnbooks.com

| 9 - ஆம் வகுப்பு | காலாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2:30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100 |

பகுதி - I (மதிப்பெண்கள்: 15) 9S04

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 x 1 = 15

1. தமிழ் விடு தூது ______________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3. தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

4. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?
அ) குக்கூஉ எனக் குயில் கூவியது. ஆ) கொக்கரக்கோஒ எனச் சேவல் கூவியது.
இ) அண்ணாஅ என அழைத்தான். ஈ) ஓடி வா ஓடி வா.

5. பகுதி, விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?
அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருந்திய

6. உலகத் தாய்மொழி நாளாகக் கொண்டாடப்படும் நாள்
அ) பிப்ரவரி 21 ஆ) ஜனவரி 21 இ) ஜூன் 5 ஈ) ஜூலை 8

7. "காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!" - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் யாவை?
அ) முரண், எதுகை, அளபெடை ஆ) இயைபு, அளபெடை, அந்தாதி
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

8. கோடிட்ட இடத்தை நிரப்புக.
உலகில் மூவாயிரம் மொழிகள் ______________
அ) பேசிய ஆ) பேசி இ) பேசும் ஈ) பேசப்படுகின்றன

9. பொருந்தாத தொடரைக் கண்டறிக.
அ) பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாளும் ஒருவர்.
ஆ) சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று ஆண்டாள் அழைக்கப்படுகிறார்.
இ) திருவெம்பாவையை இயற்றியவர் ஆண்டாள்.
ஈ) நம்மாழ்வாரின் மகளாவார் ஆண்டாள்.

10. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையானது ஏறு தழுவுதல்.
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறு தழுவுதல் தொன்மையானது.
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறு தழுவுதல்.
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறு தழுவுதல்.

11. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு ( 12,13,14,15 ) விடை தருக.**

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;



www.freetnbooks.com | FREETNBOOKS

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) தமிழன்பன் ஆ) பாரதியார் இ) குடபுலவியனார் ஈ) சேக்கிழார்

13. "யாக்கை" இச்சொல்லின் பொருள் ________

அ) உணவு ஆ) உடம்பு இ) நீர் ஈ) முயற்சி

14. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

அ) தமிழ்விடுதூது ஆ) நீதிநூல் திரட்டு இ) தமிழோவியம் ஈ) புறநானூறு

15. 'அமையா' என்பதன் இலக்கணக்குறிப்பு தருக?

அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) முற்றெச்சம் இ)வினையெச்சம் ஈ) வினைமுற்று

**பகுதி -II (மதிப்பெண்கள்: 18) பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**[வினா எண்: 21 கட்டாயமாக விடையளிக்கவும்]** **4 x 2 = 8**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

அ) 'இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது' என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

ஆ) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையுடையது.

17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18. கனவிலும் கூட இன்னாதது எவர் நட்பு?

19. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண். – இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

20. தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

21. "மிகுதியான்" என தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 =10**

22. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23. தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.

அ) கற்றோர்க்குச் சென்ற ____________________

ஆ) சித்திரமும் கைப்பழக்கம் ____________________

24. பிழை நீக்கி எழுதுக.

அ) சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக. கொள்வார்

26. படிப்போம்; பயன்படுத்துவோம்!

அ). Consonant ஆ). Water Management

27. சொல்லுக்குள் சொல் கண்டுபிடித்து எழுதுக.

அ) ஆற்றங்கரையோரம் ஆ) பாய்மரக்கப்பல்

28. காலவாகுபெயர்- குறிப்பு தருக.

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18) பிரிவு 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. திராவிடமொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

குளித்தல் என்று சொல்லுக்கு உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல பொருள். சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலை குளிர



www.freetnbooks.com | FREETNBOOKS

வைத்தல் என்பதே பொருளாகும். குளிர்த்தல் என்பது குளித்தல் என்று ஆயிற்று. 'குள்ளக் குளிரக் குடைந்து நீராடி' என்கிறார் ஆண்டாள். தெய்வச் சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

அ) குளித்தல் என்பதன் பொருள் யாது?

ஆ) குள்ளக் குளிரக் குடைந்து நீராடி' என்று கூறியவர் யார்?

இ) திருமஞ்சனம் ஆடல் என்றால் என்ன?

31. ஏறு தழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**[வினா எண்: 34 கட்டாயமாக விடையளிக்கவும்]** **2 x 3 = 6**

32. "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்" - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

33. வானவில்லை ஒப்பிட்டுப் பெரிய புராணம் கூறும் செய்தியை விளக்கி எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ). "காடெல்லாம் கழைக்கரும்பு" எனத்தொடங்கும் பெரியபுராணப் பாடல். **(அல்லது)**

ஆ). "தித்திக்கும்" எனத் தொடங்கும் தமிழ்விடு தூது பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

36. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. - இக்குறளில் பயின்று வரும் அணியினை விளக்குக.

37. பகுபத உறுப்புக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. அ) தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக. **(அல்லது)**

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39. அ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய "கால் முளைத்த கதைகள்" (ஆசிரியர் எஸ். ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. இனியன் என்பவர் இராமநாதபுரம் அஞ்சலகத்திற்குச் சென்று தன் சேமிப்பு பணத்தில் இருந்து ரூபாய் ஐந்தாயிரம் எடுக்க விரும்புகிறார். (அஞ்சலகக் கணக்கு எண்: 327276565736) தேர்வர் தன்னை இனியனாகக் கருதி படிவத்தை நிரப்புக.

42. அ) தமிழில் மொழிபெயர்க்கவும்.

1.Linguistics 2.Literature 3.Philologist 4.Polyglot
5.Phonologist 6.Phonetics

**(அல்லது)**

www.freetnbooks.com

ஆ) நீங்கள் பாராட்டுப் பெற்ற சூழல்களை எழுதுக.

**பகுதி V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) வேளாண்மை, நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.

44. அ).'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாக விவரிக்க.

45. அ) குறிப்புகளைப் பயன்படுத்தி "சாலைப் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்பு : முன்னுரை - சாலை விதிகளை அறிவோம் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்கான காரணங்கள் - தேவையான விழிப்புணர்வு - நம் கடமை - முடிவுரை.

**(அல்லது)**

ஆ). குறிப்புகளைப் பயன்படுத்தி 'மழைநீர் சேகரிப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்பு: முன்னுரை - நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் காரணங்கள் - மழைநீரைச் சேகரிக்கும் முறைகள் - மரங்களை வளர்ப்போம் மழை பெறுவோம் - பயன்கள் - முடிவுரை.



www.freetnbooks.com | FREETNBOOKS